


# SRCAS PULSE

An IQAC Initiative

7th September, 2022



# போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு வாரம் கடைபிடிப்பு

நம் கல்லூரியின் முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல்.சிவக்குமார் அவர்களின் வழிகாட்டுதலின் படி, Anti-Drug Committee மற்றும் Gender Equity Cell ஆகியவை சார்பில், 22.08.2022 முதல் 28.08.2022 வரை, போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்பட்டது.

இதையொட்டி வகுப்பறைகளில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி மாணவர்கள் முன்னிலையில் ஏற்கப்பட்டது. தொடர்ந்து 24.08.2022 அன்று 1.போதையால் சீரழியும் இளைய சமுதாயம், 2.போதையில்லா தமிழகம் என்ற தலைப்புகளில் பேச்சுப் போட்டியும், 1. வேண்டாம் போதை மயக்கம் 2.போதையால் தள்ளாடும் எதிர்காலம் ஆகிய தலைப்புகளில் கவிதைப் போட்டியும் நடத்தப்பட்டன.

25.08.2022 அன்று 1. போதையில் இருந்து மீளுமா இளைய சமுதாயம் 2. எனது பார்வையில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை என்ற தலைப்புகளில் கட்டுரைப் போட்டியும், 1. போதை எதிர்ப்பு 2. போதை தடுப்பு விழிப்புணர்வு ஆகிய தலைப்புகளில் ஓவியப் போட்டியும் நடைபெற்றன. இதில் 150 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## வெற்றி பெற்றவர்கள் விவரம்

### பேச்சுப் போட்டி:

முதல் பரிசு : A. அஃப்ரோஸ் நிஷா, இறுதியாண்டு, பி.எஸ்சி. பயோடெக்னாலஜி.<br>
இரண்டாம் பரிசு : K. விமல், இரண்டாமாண்டு, பி.எஸ்சி. இயற்பியல்.<br>
மூன்றாம் பரிசு : J. பரத் கண்ணா, முதலாமாண்டு, பி.எஸ்சி. சி.எஸ்(டி.ஏ).

### கவிதைப் போட்டி:

முதல் பரிசு : N.M. வைஷ்ணவி, முதலாமாண்டு, பி.எஸ்சி. சி.எஸ்(டி.ஏ).<br>
இரண்டாம் பரிசு : M. சுஜய்குமார், முதலாமாண்டு, பி.சி.ஏ.<br>
மூன்றாம் பரிசு : A. ஸ்ரீமதி, இரண்டாமாண்டு, பி.சி.ஏ.

### கட்டுரைப் போட்டி:

முதல் பரிசு : S. நித்யா, இரண்டாமாண்டு, பி.சி.ஏ.<br>
இரண்டாம் பரிசு : S. ஹாரிஸ், இரண்டாமாண்டு, பி.சி.ஏ.<br>
மூன்றாம் பரிசு : R. கீர்த்திகா, இரண்டாமாண்டு பி.பி.ஏ. சி.ஏ.

**<u>ஓவியப் போட்டி:</u>**

முதல் பரிசு : S.K. நாக தேவதர்ஷினி, இறுதியாண்டு, பி.காம். பி.ஏ.
இரண்டாம் பரிசு : S. ஃபாத்திமா ஃபவிஷா, முதலாமாண்டு, பி.காம். சி.எம்.ஏ.
மூன்றாம் பரிசு : A. அட்சயா, இறுதியாண்டு, பி.ஏ. ஆங்கிலம்.

ஆகியோர் பேச்சு, கட்டுரை, ஓவியம், கவிதைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுக் கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன. போட்டியாளர்கள் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் த.சத்தியசீலன், முனைவர் ரா. பிரேம்குமார், பேரா. ஜி.தினேஷ்குமார் மற்றும் ஆசிரிய, மாணவ உறுப்பினர்கள் செய்துள்ளனர்.

## <u>பேச்சுப் போட்டி</u>










# Events @ SRCAS

## கவிதைப் போட்டி





## கட்டுரைப் போட்டி










# போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு





# வண்ணத்தூரிகை

## ஓவியப் போட்டி வெற்றியாளர்கள்




**First Prize**
S.K. Naga Devadharshini,
III B.Com P.A







**Special Appreciation**
G. Sandhiya Vadhanam,
I B.Sc IT

# வண்ணத்தூரிகை

## ஓவியப் போட்டி வெற்றியாளர்கள்




**Second Prize**
S.Fathima Fawiza
I B.Com CMA









**Third Prize**
A. Atchaya
III B.A. English

# வண்ணத்தூரிகை

P.Jayanthkumar,
II B.Sc Chemistry




S. Roshini, I BBA




M.Subhashini, II B.Com IT



## பரிசு பெற்ற கட்டுரைகள்

# எனது பார்வையில் போதைத் தடுப்பு நடவடிக்கை

உலகை ஆக்கிரமிக்கும் பிரச்சினைகளுள் மிக முக்கியமானது, போதைப் பொருள். உலக நாடுகள் போதைப் பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இருப்பினும் அவற்றை அழிப்பது இயலாத ஒன்றாகவே உள்ளது. போதைப் பொருட்களின் பயன்பாடு சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை என அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

போதைப் பொருட்கள் பொழுதுபோக்கிற்காகவும், உடம்பில் போதையேற்றுவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. பலதரப்பட்ட போதைப்பொருட்கள் எளிதாகக் கிடைக்கின்றன. இவற்றால் ஏற்படும் தீமைகளைப் பற்றி மக்கள் அறிந்திருந்தாலும், அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், அவற்றிற்கு தங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

போதைப் பொருட்களால் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதிகப்படியான போதைப் பொருட்கள் பயன்பாடு, மூளை மற்றும் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கிறது. மதுப்பழக்கத்தால் கல்லீரல் பாதிக்கப்படுகிறது. புகையிலைப் பொருட்கள் வாய், தொண்டை பகுதிகளில் புற்றுநோய் பாதிப்பை விளைவிக்கின்றன.

போதைப் பொருட்களோ உடல் உள்ளுறுப்புகளை கொஞ்சம் கொஞ்சம் அழிக்கத் தொடங்கி, நாளடைவில் அவற்றின் செயல்பாட்டைத் தடுக்கின்றன. இவற்றால் பாதிக்கப்படுவது தனிநபர் மட்டுமின்றி, அவர்கள் சார்ந்த குடும்பம் மற்றும் சமுதாயமும் பாதிப்படைகிறது. சமூக விரோதச் செயல்களுக்கு தூண்டுகின்றன.

தேசிய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு, போதைப் பொருட்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த, மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஓர் அமைப்பாகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 47 போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுக்க வழிவகைச் செய்கிறது. சட்டப்பிரிவு 64-ஏ போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள், அவற்றில் மீள, மறுவாழ்வு மையங்களில் சிகிச்சைப் பெற வழிவகை செய்கிறது. போதையற்ற சமுதாயத்தை உருவாக்க நாம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம்.

(போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு வார கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது)

- சோ.நித்யா, II பி.சி.ஏ.

# பரிசு பெற்ற கட்டுரைகள்

## தீய வாழ்வு ஒளியைக் கண்டதும் உண்டு

போதையுடன் இங்கு நடக்கும் ஓர் அரசியல், அதையும் தடுப்போம் என்று எழும் மற்றும் ஓர் ஆட்சி, இதை கண்ட நான் இக்கட்டுரையாக வரைகிறேன். ஆம், நான் முன்னே சொன்னவாறு இங்கு ஓர் அரசின் வருமானமே சாராய கடையில் தான் உள்ளது. அத்தகைய வருமானத்தை அரசே தடுக்குமா? ஆனால் நம் கண்ணோட்டம் சரியா? அரசு தான் தடுக்க வேண்டுமா? இத்தனை கேள்விக்கு பதில் எங்கு உண்டு. நம் சுதந்திர நாட்டில் எல்லாம் தனி மனிதருக்கும் சுய அறிவு உண்டு. தன் வாழ்க்கையை தான் தன்னை உணர வேண்டும்.

மதுவினை மருந்து என்று எண்ணி அதை தினமும் உண்கொள்வார்கள், அது சரி. ஆனால் "அளவின்றி உண்டால் அமிர்தமும் நஞ்சு" என்னும் வாக்கியத்திற்கு இணங்க மதுவினை அளவின்றி உண்டு இறந்தவர்கள் பலர். மனிதன் முதன்முதலில் சுகத்திற்காக உண்ட மது இன்று பல மன வழிகளையும் போக்கும் என்று ஓர் சிந்தனையில் அது மட்டுமே ஒரே வழி என்று பலர் இதை தன் வாழ்வில் ஓர் பாகமாகவே ஆக்கிக் கொண்டனர்.

பலர் வாழ்க்கையை தலைகீழாக மாற்றிய சம்பவம் உண்டு. அதில் நல்ல வாழ்வு சோகத்தை கண்டதும் உண்டு. தீய வாழ்வு ஒளியைக் கண்டதும் உண்டு. ஆனால், இதில் எதுவும் நிரந்தரம் அல்ல மற்றுமொன்று தீய வாழ்வே மிகவும் தீமையாக மாறிய சம்பவங்கள் அதிகம். ஆனால், அத்தகைய தீய வாழ்விலும் இங்கு வாழும் மனிதர்கள் மதுவினை மறப்பது இல்லை என்று எண்ணிய போது மனம் கவலைபடுகிறது.

நம் நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் திரையுடன் மிகச்சிறந்த ஈர்ப்பினை உடையவர்கள். அதில் வரும் அனைத்து செயல்களையும் செய்ய வேண்டும் என்று ஆசை கொள்ளும் மக்கள் அதை போல் தான் மாணவ செல்வர்களும் திரைபடத்தால் ஈர்க்க செய்தார்கள்.

என்னதான் திரைக்கு முதல் "குடி குடியை கெடுக்கும்" என்று சொன்னாலும் திரைக்கு குடித்துவிட்டு வரும் மக்கள் தொகையே அதிகம். இதைவிட சூப்பர் ஸ்டார் குடிக்கும் முறையைக் கண்டு ரசிகர்களும் அதையே பின்பற்றினார்கள். அவர் குடிக்கும் அதே நஞ்சு விளைந்த ஒன்றை இங்கு இவர்களும் விரும்புவார்கள்.

அன்று முதல் இன்று வரை பல திரைப்படங்கள் போதை தடுப்பை உணர்த்தி வந்தாலும் அதை பொருட்படுத்தாமல் குடிக்கும் மக்களே இன்று அதிகம்.

திருத்தம் என்பது மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டிய ஒன்று, திரையில் செய்ய வேண்டிய ஒன்று அல்ல.

இங்கு பல மதுக்கடைகளில் மற்றும் மதுபாட்டிலில் அதன் விளைவுகளை மற்றும் விழிப்புணர்வு போன்ற பல செயல்கள் செய்தும் பயன் இல்லை. பல மக்கள் தன் கவலைகளை கண்டு மதுவிடம் செல்வதை விட அதன் தீர்வினை மற்றொரு வழியில் காண செய்ய வேண்டும்.

இங்கு பல மனைவிகள் தன் பிள்ளைகளையும் தன் கணவரையும் திருத்த நினைத்து ஏங்கிய காலம் ஒய்ந்து இப்பொழுது பெண்களும் மது அருந்த தொடங்கிவிட்டார்கள். இதை கண்டு மனம் வருந்துகிறேன். ஆண்களை விட பெண்களுக்கு தான் பல தீய பாதிப்பு உள்ளதை விழிப்புணர்வு செய்தால் இங்கு மறுப்பு என்னும் மனப்பான்மை இல்லை என்றே சொல்ல வேண்டும்.

மது மறுப்பு என்பது ஒவ்வொரு மனிதருக்கும் இங்கு உருவாக வேண்டும். தன் மனப்பான்மை இங்கு மாற்றப்பட வேண்டும். இதை தான் என் பார்வையில் தடுப்பு நடவடிக்கை என்பேன். ஆனால் அது இன்று ஏற்படும் நிலை எங்குமே காண முடியவில்லை.

பல தடையை கடந்து என் கட்டுரையைப் படித்தாலும் இங்கு திருந்தும் மனிதர் இல்லை. பல மனம் மற்றும் சூழல் வலிகளை கடந்தும் திருந்தும் மனிதர்கள் குறைவு. ஆனால், தான் தன்னுடன் பேசும் 2 நிமிடம் தன் வாழ்வை மாற்றிவிடும். அத்தகைய 2 நிமிடம் நம் மக்களிடம் இல்லை என்றே நினைக்க வைக்கிறது. மனம் ஒன்றி வாழும் வாழ்வில் மதுவின்றி வாழ்வோம்!

(போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு வார கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது)

- ச.ஹரிஷ், II பி.சி.ஏ



## பரிசு பெற்ற கட்டுரைகள்

# போதையில் இருந்து மீளுமா இளைய சமுதாயம். . ?

இளம் ரத்தத்தினை சார்ந்தே நம் நாடு வளர்கிறது. ஆனால் மற்றொரு புறம் இளைஞர்களின் எதிர்காலத்தை சிதைக்கக் கூடிய போதைக் கலாச்சாரம் பெருகி வருகிறது. இன்றைய இளைஞர்கள் போதை பழக்கத்தினை "நாகரீகத்தின் உச்சம் எனக் கருதுகிறார்கள். கையில் இருக்கும் பணம் முழுவதையும் கேளிக்கைக்காக செலவு செய்யும் மனோபாவம் வளர்ந்து வருகிறது.

நாட்டையே உலுக்கிய தில்லி மாணவி மானபங்க சம்பவத்திலும், ஆங்காங்கே நடைபெறும் பாலியல் மற்றும் கொலை போன்ற சம்பவங்களுக்குப் பின்னணியில் உற்சாக பானம் என்னும் "மது" இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

கடையின் ஒரு புறம் நின்று தந்தை புகைத்தால் மறுபுறம் நின்று மகன் புகைப்பிடிக்கும் அளவிற்கு புகைப்பழக்கம் சாதாரணமாகிவிட்டது. இவ்வாறு வளர்ச்சியின் பாதையை தவறவிட்டு போதையின் பாதைக்கு அடிமையாகி தவிக்கின்றது இன்றைய இளம் தலைமுறை.

"கவலைகளை மறக்கவும் சந்தோஷங்களை கொண்டாடவும்" உணர்ச்சிவயப்பட்டு போதைக்கு அடிமையாகின்றனர். தவறான நண்பர்களின் தூண்டுதலால் போதை மாத்திரைகளை எடுத்துக் கொள்கின்றனர். யதார்த்தத்தை மறக்க அல்லது மாற்ற நினைப்பவர் மீண்டும் மீண்டும் போதைக்கு அடிமையாகின்றனர்.

பத்தாம் வகுப்பு படிக்கும்போதே வாழ்வில் நடக்கும் அனைத்திற்கும் "பார்ட்டி" என்ற பெயரில் இன்றைய மாணவர்களும், சிறுவர்களும் விதவிதமான போதைக்கு அடிமையாகின்றனர். முன்பு பள்ளிகளில் சாக்பீஸ் சாப்பிட்டவர்கள் தற்போது இருசக்கர வாகனங்களில் இருக்கும் "பெட்ரோல் டேங்கைத்" திறந்து அதனை முகர்ந்து ஒருவித போதையில் திளைக்கின்றனர்.

போதை மாத்திரைகளை குளிர்பானங்களில் கலந்து அதனைப் பருகி மகிழ்கிறார்கள். அரசால் தடை செய்யப்பட்ட போதை பாக்குகளும் இளைஞர்களுக்கு எளிதில் கிடைக்கிறது. இவ்வாறு வெளியுலகிற்கும், பெற்றோருக்கும் தெரியாமல் இளைஞர்களும், மாணவர்களும் போதையின் சுகத்திற்கு பழகிவிட்டார்கள்.

சர்வதேச போதை விழிப்புணர்வு தினமான ஜூன் 26 – ஆம் நாளை முன்னிட்டு சுவரொட்டிகள், பதாகைகள், துண்டு பிரசுரங்கள், பத்திரிக்கைகள் மூலம் காவல் துறையினர் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். மேலும் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் விழிப்புணர்வு முகாம்கள் அமைத்து அறிவுரைகளை வழங்குகின்றனர்.

போதை பொருள் விற்பனை, கடத்தல் தொடர்பாக ஆங்காங்கே கைது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், அதனை முழுமையாக கட்டுப்படுத்த முடியாதது ஏன்? என்னும் கேள்வி மக்களிடம் எழுகிறது.

போதை பழக்கத்திலிருந்து மீள்வதற்கு தன்னம்பிக்கையுடன் இருத்தல் வேண்டும். போதை பழக்கத்தின் எண்ணம் வந்தால் அவர்களுக்கு பிடித்தமான செயல்களில் கவனத்தை செலுத்த வேண்டும். மருத்துவர்களின் உதவியோடு உரிய சிகிச்சை பெற்று மீண்டு விடலாம்.

குடிக்கும் மக்கள் திருந்தியிருந்தால் என்றோ மது ஒழிந்திருக்கும் ஏனோ இன்றைய நவீன உலகில் பெரும்பாலானோர் ஏதோ ஒரு போதைக்கு அடிமையாக உள்ளனர். ஒரு சிறு துளி என்றாலும் போதை பொருள் நடமாட்டம் என்பது நடமாட்டம்தான். அதற்கு ஒருவர் அடிமையானாலும் அது "அவமானம்"தான். வளர்ந்து வரும் இந்திய நாட்டின் தூண்களாக விளங்கும் இளைய சமுதாயத்தின் எதிர்காலத்தைக் காப்பாற்ற "போதை பழக்கத்திலிருந்து நாம் மீண்டே ஆக வேண்டும்" என்ற கட்டாயத்தில் உள்ளோம்.

(போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு வார கட்டுரைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றது)

-ரா. கீர்த்திகா II BBA CA



# போதையில் இருந்து மீளுமா இளைய சமுதாயம். . ?

ஒரு தந்தை தன் மகன் தலையெடுத்து விட்டானா? எனக்கு கவலையில்லை என்பார். மாணவர்கள் நினைத்தால் சாதிக்க முடியும் என்பார் ஆசிரியர். இளைஞர்களின் எழுச்சியால் சமுதாயத்தை மாற்றியமைக்க முடியும் என்பார் நாட்டின் தலைவர். இதற்கிடையில் இந்த இளைய சமுதாயம் போதைக்கு அடிமையாகி வருவது, நாட்டின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி வருகிறது.

போதைப் பொருட்கள் பயன்படுத்தும் போது, உடலில் ஒருவித வேதியியல் மாற்றம் ஏற்படுகிறது. இதனால் பலவித உணர்வுகள் அவர்களுக்குள் தோன்றுகின்றன. சமூக ஊடகங்களின் வழியாக குழுக்கள் அமைத்து, போதைப் பொருட்கள் விற்பனை நடைபெற்று வருவதாக காவல்துறை வெளியிட்டுள்ள தகவல் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து சைபர் செல் மூலமாக சமூக ஊடகங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

போதைப் பொருட்கள் பயன்பாட்டைக் குறைக்க, தொடர்ச்சியாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியம். அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து, இளைஞர்களிடையே தொடர்ச்சியாக அறிவுறுத்த வேண்டும். தமிழக அரசோ தொடர்ந்து பள்ளி, கல்லூரிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. இருப்பினும் தன்னளவில் ஏற்படும் மாற்றமே, போதைப் பொருள் பழக்கத்தில் இருந்து விடுவிக்கும்.

இதிலிருந்து மீள நினைப்பவர்கள் முறையான மருந்து, உணவுப் பொருட்கள், உடற்பயிற்சி, தியானம் போன்றவற்றால், போதைப் பொருள் பழக்கத்தில் இருந்து மீள முடியும். பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, தந்தைமார்கள் போதையின் பிடியில் இருந்து விடுபட வேண்டும். ஈடு இணையற்ற இந்த மனிதப் பிறவியை, மகிழ்வுடன் வாழ்ந்து, பிறருக்கும் பயனளிக்க வேண்டும்.

-ரா. காவியஸ்ரீ, I பி.எஸ்சி. இயற்பியல்

# எனது பார்வையில் போதை தடுப்பு நடவடிக்கை

நம் சமூகமும் சமுதாயமும் எதிர்கொள்ளும் சவால்களில் மிக முக்கியமானது போதை பொருள். போதை பொருள் பயன்படுத்துவதால் மனஉளைச்சல் ஏற்படுவதுடன் உயிரிழப்பு ஏற்படும் அபாயமும் உள்ளது. இதனால் வரும் கேடுகளையும் அதிலிருந்து எவ்வாறு மீள்வது என்பனவற்றை பின்வருமாறு காண்போம்.

போதைப்பொருள் பயன்படுத்துபவர் அதில் இருந்து மீள முடியாமல் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். தினசரி உணவு உண்பதை போல போதை பொருட்களை பயன்படுத்தி வருகின்றனர். போதை பொருட்களில் பலவகை உள்ளன. அதில் சிலர் போதையை போதை பொருளை சமூக நாகரிகத்திற்கும் சமூக செல்வச்செழிப்பை வெளிப்படுத்தவும் பயன்படுத்துகின்றனர்.

அதில் மிகவும் முக்கியமான போதைப் பொருள் மது பானம் ஆகும். மதுபானம் அனைவராலும் எளிதில் வாங்கக்கூடிய ஒரு நச்சுப் பொருள் ஆகும். மது பானங்களை தவிர்த்து; புகையிலை, கஞ்சா, அபின், கொக்கைன், போன்ற போதைப் பொருள் உயிருக்கு மிகவும் ஆபத்தானவை. இவற்றை விற்பனை செய்ய பல நாடுகளின் அரசாங்கம் தடை விதித்துள்ளன. மேலும் இவற்றை பயன்படுத்துவோரை குற்றவாளிகளாகக் கருதி கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டு வருகிறது, இருந்தும் பயன் இல்லை என்பதற்கேற்ப பலர் இவற்றை யாருக்கும் தெரியாமல் பயன்படுத்தி வருகின்றனர்.

உலகில் போதைப் பொருட்களை பயன்படுத்துவதில் பெரும்பாலும் இளைஞர்களே| இளைஞர்கள் விளையாட்டாகவும் பொழுதுபோக்கிற்காகவும் அற்பமாக சிறு ஆசைக்காகவும் போதைப்பொருளை பயன்படுத்துவது உயிருக்கே கேடு விளைவிக்கின்றது. சமுதாயத்திலும் அவப்பெயரை ஏற்படுத்துகிறது. போதையில் தன்னை மறந்து பிறரிடம் ஆக்ரோஷமாகவும் மூர்க்கத்தனமாகவும் நடந்து கொள்கின்றனர். இதன் காரணம் இளைஞர்களின் பெற்றோர்கள்தான் அல்லது அவரைச் சுற்றியுள்ள நபர்களில்

யாரேனும் போதைப்பொருள் பயன்படுத்துபவராக இருக்கலாம். பெற்றோர்கள் தங்களின் வேலைப்பழு காரணமாக பெற்ற பிள்ளைகளை கண்டுகொள்ளாமல் விட்டு விடுகின்றனர். இதனால் அவர்கள் எங்கே செல்கின்றன, யாரோடு பழக்கத்தில் உள்ளனர், தேவைக்குத்தான் பணம் தருகிறோம் என, எதையும் ஆராயாமல் தவறு செய்து விடுகின்றனர். போதைப்பொருள் விற்பனை செய்பவர்களும் இளைஞர்களை குறி வைத்து விற்பனை செய்கின்றனர்.

போதைப்பொருளை ஒழிக்க அனைவரும் முனைய வேண்டும். அக்காலத்தில் போதைப்பொருள் என்ற பெயரை கேட்பதை மிக அரிதாகும். ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது வீதிகள்தோறும் மருந்தகம் கோவில் பள்ளிகளுக்கு சமமாக மதுபானக்கடைகள் பெருகிக்கொண்டே வருகின்றன. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பயன்படுத்தி வருகின்றனர். இவற்றை தடுத்து நிறுத்த வேண்டும்.

போதை ஒழிப்பு பற்றிய விழிப்புணர்வுகளை வீதி தோறும் ஏற்படுத்தவேண்டும். போதைப்பொருள் உபயோகித்து செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றம் செய்பவரை விட செய்ய தூண்டுவதற்கு தண்டனை கடுமையாக இருக்க வேண்டும். ஆகையால் போதைப்பொருள் விற்பனை செய்பவருக்கு ஆயுள் தண்டனை வழங்க வேண்டும். போதை பாவனையில் இருந்து நம் சமூகம் மீண்டுவர எத்தகைய செயல்களிலும் ஈடுபடலாம். இவற்றை இளைஞர்களை முன்னின்று போதைப்பொருள் ஒழிப்பு தொடங்கவேண்டும்.

பெரும்பாலான இளைஞர்கள் திரையுலகில் தங்களுக்கு பிடித்த கதாநாயகர்கள் போதைப்பொருள் பயன்படுத்துவதைப் போல, அவர்களை கதாநாயகர்களாக பாவித்து தவறான பாதையில் செல்கின்றனர். ஆனால் அதே சினிமாவில் போதைப்பொருளை பயன்படுத்துவதனால் ஏற்படும் தீமைகளை காண்பித்தும், அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர். இதனால் உயிரிழப்பு ஏற்படும் அபாயமும் ஏற்படுகின்றன. தேர்வில் தோல்வி,

வேலையின்மை, வீட்டில் பிரச்சனை, காதல் தோல்வி, கூடா நட்பு போன்ற காரணங்களினால் இதற்கு அடிமையாகி விடுகின்றனர். இதிலிருந்து அனைவரும் மீண்டு வர வேண்டும். எவ்வாறென்றால் போதைப் பொருள் வாங்க செலவாகும் பணத்தை சேமித்து, தனக்கு தேவையான அத்தியாவசிய பொருளை வாங்கலாம். பின் ஆரோக்கியமான உணவுகளை பழங்களை உண்டு ஆரோக்கியம் பெறலாம். போதை என்னும் மாய உலகில் இருந்து மீண்டு வர இளைஞர்கள் முனைய வேண்டும்.

போதை மனிதனின் மரணத்திற்கான பாதை, போதையினால் எத்தனை உயிர்கள் பறி போகின்றன! எத்தனை குடும்பங்களை நாசமாக்கி இருக்கின்றன! இவற்றில் மனதில் வைத்து அவற்றை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளையும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். நாட்டின் எதிர்காலமே இளைஞர்கள் கையில் தான் உள்ளது. இனி வரும் சமுதாயத்திற்காகவும் வருங்கால சந்ததியினருக்காக போதைப்பொருளை உபயோகம் செய்வோரை தடுக்க வேண்டும். போதையினால் மனிதன் மீண்டும் குரங்காக மாறும் அபாயத்தை தடுக்க வேண்டும். ஏனென்றால் குரங்குகளுக்கு தான் உறவுமுறைகள் பாசம் நேசம் எதுவும் தெரியாதகுரங்கிலிருந்து மனிதன் வந்ததை போல மீண்டும் குரங்காக மாறிவிடாமல் இருக்க போதையை ஒழித்து நாட்டை செழிப்பாக வேண்டும்.

- கே.ராமகிருஷ்ணன், II B.Com B&I





# போதையிலிருந்து மீள்வது அவசியம்

நம் நாட்டின் எதிர்கால தூண்கள், இளைஞர்கள். நம் நாட்டின் கண்கள், இளைஞர்கள். எதிர்கால விருட்சங்கள், இளைஞர்கள். விதைகளின் மதிப்பின் அடிப்படையிலும் அதன் தரத்தின் அடிப்படையிலும் தான் விருட்சமானது ஓங்கி வளர்ந்து செழிப்பாக வளரும். அத்தகைய விதையாகிய இன்றைய இளைய சமுதாயம் போதை என்னும் வியாதியால் பாதிக்கப்படுகிறது.

கல்வி கற்கும் இடத்தில் பாடத்தைப் படித்ததை விட, மதுவை குடித்தவனின் விகிதம் இன்றைய இளைய சமுதாயத்தில் பெருமளவு. போதைக்கு அடிமையாவது பெருமை என இளைய தலைமுறையிடம் தவறான கண்ணோட்டம் காணப்படுகிறது.

**‘காயம் பகிர இங்கே தஞ்சமில்லை**
**சாரயம் பகிர எங்குமே பஞ்சமில்லை’**

துன்பம் நேர்ந்தால் பகிர யாருமில்லை. துன்பம் நேர்ந்தால் மனிதன் மதுவை தேடிப்போது வழக்கமாய் மாறிவிட்டது. இன்பம், துன்பம், சில தருணங்கள் என நண்பனிடம் பகிர்ந்த காலம் அழிந்து, மது, புகையிலை, கஞ்சா என பகிர்வதுதான் நட்பு என பழக்கத்திற்கு வந்தது இந்தகாலம். தகப்பனும் மகனும் பகிர்ந்து அருந்தினால், இளைய சமுதாயம் போதையில் இருந்து மீளுமா? சுதந்திரம் கிடைத்து 75 ஆண்டுகள் ஆனாலும், மீண்டும் அடிமையாகி கொண்டிருக்கிறது நம் இளைய சமுதாயம்.

அன்று அடிமையானதோ வெள்ளைக்காரனிடம், இன்று அடிமையானதோ போதை என்னும் கொள்ளைக்காரனிடம். போதைக்கு அடிமையாவது தனிமையாலும், துன்பத்தாலும், சுற்றி உள்ள சூழலாலும், அதன் பின்பற்றுதலாலும் தான். இதனை ஆராய்ந்து ஏன்? எப்போது? எப்போது? என உணர்ந்து அடிமையாவதைத் தடுத்து இளைய சமுதாயத்தை மீட்டெடுக்க வேண்டும்.

**பாதை மறந்தவன் வழி மாறினான்**
**போதைக்கு பறந்தவன் ஆளே மாறினான்**

ஒரு முறை முயற்சி செய்து பார்ப்போம் என தொடங்கி பல முறை முயற்சி செய்தாலும் மீண்டெழ முடியவில்லை என புலம்புகிறார்கள் பலர். போதைக்கு அடிமை ஆனவன் முதலில் தன் கடமையை மறந்து மடமைக்குச் செல்கிறான், பின் உடைமையை உதிர்த்து கெட்டுத் திரிகிறான். போதைக்கு அடிமையானவனின் வாழ்வு, பெரும் பேரழிவை சந்திக்க நேரிடுகிறது. போதையின் பாதை அதற்கு அடிமை ஆவதோடு மற்றும் நிறுத்திவிடவில்லை. அனைவரையும் தன் பாதைக்கும் கொண்டு வர துடிக்கிறது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் போதைப் பொருட்கள் ஒரு சிற்றுண்டியாகவே மாறிவிட்டது. கல்லூரியில் போதை பரிமாற்றம் செய்யத் தொடங்கி போதை பொருள் கடத்தல்காரனாக மாற்றும் போதை பொருட்களுக்கு உண்டு. போதையின் பாதை ஒருவனின் அழிவு மட்டுமல்ல, நம் எதிர்காலத்தின் பேரழிவு ஆகும்.

**மதுவை பழகாதே! வாழ்வை பாழாக்காதே!**

ஒருவன் கெட்டால் அவனோடு அவனின் வாழ்வு அழிந்துவிடும், அவனைச் சுற்ற இருப்பவனும் கெட்டால் நாடே அழிந்துவிடும். ஆதலால், மாற்றம் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் எழ வேண்டும்.

வாழ்வின் லட்சிய பாதையை நோக்கி அவன் பாதை அமையவேண்டும், போதையை நோக்கி அல்ல. அழகான எதிர்காலம் உருவாக மதுவை பழகாத இளைஞர்கள் எழ வேண்டும். போதைக்கு அடிமையானவனை மீட்டெழுவதைவிட போதை பொருட்களை தயாரிப்பவனை தடுக்க வேண்டும். போதையின் விளைவுகள் போதையில் இருப்பவனுக்குத் தெரியாது, சொன்னால் புரியாது. ஆதலால், அவனைச் சுற்றி உள்ள நாமே சரியான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

சரியான பாதையும், செறிவான சிந்தனையும், வளமான கருத்துகளும் இளம் வயதில் இருந்தே ஊட்டி வளர்த்தால் அழகான நாடும், செழிப்பான மக்களும், அழியாத இன்பமும் ஓங்கி வளரும். சரியான விதிமுறைகளைப் பின்பற்றி கொரோனாவிலிருந்து மீண்ட நாடு, செறிவான நெறிமுறைகளைக் கொண்டு போதையிலிருந்தும் மீளும்.

**நாட்டை ஆளும் இளைய சமுதாயம்!**
**போதையிலிருந்து மீளும் எதிர்காலம்!**

- - சி.கோகிலபிரியா, III BBA CA

# Staff Participations

## Mathematics - IST Program

**16th and 29th August 2022**

**Dr A Divya, Assistant Professor of PG and Research Department of Mathematics has successfully completed IST Program organised by Bharathiar University from August 16 to 29, 2022 on Differential Equations and its Applications.**

NCM SPONSORED
INSTRUCTIONAL SCHOOL FOR TEACHERS
**"DIFFERENTIAL EQUATIONS - THEORY AND APPLICATIONS"**
16-29 AUG-2022




Jointly organized by
Department of Mathematics & UGC HRDC, Bharathiar University, Coimbatore-46

***Down:*** Ms.S.Pragathi, Ms.J.V.Brainy, Ms.Y.M.Gifteena Hingis, Ms.Amrutha Rose Baby, Mrs.R.Thanamani, Mrs.R.Gokilam, Ms.U.Ilakia, Ms.M.Archana, Ms.M.Manimekalai, Ms.T.Elizabeth Jeyanthi, Ms.N.Soundarya Lakshmi, Ms.R.Saranya, Ms.R.Ilavarasi, Ms.K.Suvitha, Ms.Y.Sudha, Dr.J.Tamilmani.
***Sitting:*** Dr.N.Annapoorani, Dr.K.Mathiyalagan, Prof.S.Saravanan (Organiser), Dr.Ali Hyder, Dr.Venky Krishnan (Organiser), Prof.P.S.Datti, Prof.P.Kandaswamy, Prof.N.Suresh Babu (Organiser), Dr.S.Narayanamoorthy, Dr.M.Muthtamilselvan, Dr.R.Rakkiyappan (Organiser), Dr.A.Divya.
***Standing-1st Row:*** Mr.V.Umapathi, Mr.S.Sridhar, Mr.T.N.Parthasarathy, Mr.V.Navaneetha Krishnan, Mr.Jyotirajan Nayak, Mr. Sanowan Ahasan Dr.M.Meenasaranya, Mrs.R.Muthumeena, Ms.R.Nandhini, Mr.Guddu Kumar, Mr.N.S.Gopal, Mr.Yashveer Kumar, Dr.Abdur Raheem, Mr.Divyanesh Agrawal, Dr.Swaraj Paul, Mr.Jyoti Turi, Dr.Avijit Sarkar, Mr.Nawaj Sarif, Mr.Anish Kumar, Dr.N.Raja.
***2nd Row:*** Mr.L.Prabin, Mr.S.S.Mohanrasu, Mr.P.Gokul, Mr.M.Arunkumar, Mr.Dona Alex, Mr.P.Shafeequdheen, Mr.E.Vargees Kaviyan, Mr.M.Manikandan, Mr.S.Shanmugasundaram.





NATIONAL CENTRE FOR MATHEMATICS
www.ncmath.org
(A Joint Centre of TIFR and IIT Bombay)
Advanced Training in Mathematics
Instructional School for Teachers
"DIFFERENTIAL EQUATIONS - THEORY AND APPLICATIONS"
(Funded by National Centre for Mathematics)
A Joint initiative of IIT Bombay & TIFR Mumbai
(August 16 - 29, 2022)

Certificate

This is to certify that Dr. / Mr. / Ms. A. DIVYA, ASSISTANT PROFESSOR from SRI RAMAKRISHNA COLLEGE OF ARTS & SCIENCE, COIMBATORE has participated in the Instructional School for Teachers on "Differential Equations - Theory and Applications" held at Bharathiar University, Coimbatore from August 16 - 29, 2022.

Dr. R. Rakkiyappan, Organiser (BU) | Prof. S. Saravanan, Organiser (BU) | Prof. Venky Krishnan, Organiser (TIFR)

# Mathematics - Freshers Day

## 7th September 2022










**The house number in Raja Karorimal's lane starts with natural numbers, i.e. 1,2,3..... Sum of all the house numbers on the left side of Raja's house is equal to the sum of all the house on its right side. There are more but less than 3000 houses on the right side of Raja's house. How many houses are there in the lane?**

**Check with your Answers for Page No. 10**

# International Business - National Seminar

## 7th September 2022

**One day Sponsored National Seminar - PG and Research Department of International Business organised Insurance Institute of India sponsored National Seminar on "Insurance and Risk Management - Impact and Development in Post Pandemic Regime" in collaboration with Coimbatore Insurance Institute. The Semiar Proceedings was released by Chief Guest: Mr. B. Prasad, Honorary Secretary, Coimbatore Insurance Institute. Resource Persons: Dr. V. Arulmurugan, Associate Professor and Research Supervisor, Pondichery University and Prof. Manoj Louis, Government First Grade College, Managalore. More than 150 Faculty and Students from various part of the Country participated and published their Research Article. Certificates were distributed to the participants.**









# Events @ SRCAS










SRI RAMAKRISHNA
COLLEGE OF ARTS & SCIENCE

PG AND RESEARCH DEPARTMENT OF INTERNATIONAL BUSINESS

ONE DAY SPONSORED NATIONAL SEMINAR

ON

INSURANCE AND RISK MANAGEMENT - IMPACT AND DEVELOPMENT IN POST PANDEMIC REGIME

Presided by

**Dr.B.L.Shivakumar**

Principal & Secretary

Special Address by

**Sri. B.Prasad**

Hon'Secretary

Coimbatore Insurance Institute

7 SEPTEMBER,2022

Time : 09.30 am

Venue : Conference Hall I



SRI RAMAKRISHNA
COLLEGE OF ARTS & SCIENCE

PG AND RESEARCH DEPARTMENT OF INTERNATIONAL BUSINESS

ONE DAY SPONSORED NATIONAL SEMINAR

ON

INSURANCE AND RISK MANAGEMENT - IMPACT AND DEVELOPMENT IN POST PANDEMIC REGIME

# Biotechnology - National Nutrition Week

**6th September 2022**

**Department of Biotechnology organized National Nutrition Week 2022 on 6th September 2022 and conducted various events such as Technical session, Elocution, Flameless Cooking, Drawing & Poster Presentation. Dr. S. Mustaq Ahammed, Managing Director, LifeDNA Diagnostic Laboratory delivered a session on topic "Nutrition, Genes & Health".**

## Technical Session













# Events - Flameless Cooking










## Events - Drawing, Poster Presentation & Elocution











# Computer Applications - Quizzy Ladder

## 5th September 2022

**Department of Computer Applications Organized Interdepartmental Quizzy Ladder event on September 5, 2022. A total of 51 students participated from various departments. QUIZZY LADDER like other quizzes, was very informative and knowledge-enriching for the participants.**



# SRCAS




ROOM

**தினமலர்**

**இன்றைய நிகழ்ச்சி**

**கட்டுரை மற்றும் ஓவியப்போட்டி**



ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, நவ இந்தியா
• மதியம், 2:00 மணி.

**இந்து தமிழ் திசை**

**நகரில் நடப்பவை**

**கோவை**

கல்லூரி மாணவர்களுக்கு இடையேயான பேச்சு மற்றும் கவிதைப்போட்டி: கல்லூரி வளாகம், ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, நவஇந்தியா, கோவை, மதியம் 2 மணி.

**தினமணி**

**இன்றைய நிகழ்ச்சிகள்**

**கோவை**

போதைப்பொருள் விழிப்புணர்வு ஓவியப் போட்டி: ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, நவ இந்தியா, பிற்பகல் 2.

THE HINDU
WEDNESDAY, AUGUST 24, 2022

**COIMBATORE TODAY**

**Sri Ramakrishna College of Arts and Science:** Say no to Drug, awareness week, 9.30 a.m.

**தினமணி**

**இன்றைய நிகழ்ச்சிகள்**

போதைப் பொருள் கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வு போட்டிகள்: ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, நவ இந்தியா, பிற்பகல் 2.

**தினமலர்**

**இன்றைய நிகழ்ச்சி**

**கவிதைப்போட்டி**

ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, நவ இந்தியா • மதியம், 2:00 மணி.

# INFO Corner








**Take part in The Learnathon 2022 being organized by ICT Academy and learn your way around the basics of Process mining skills with Celonis.**

**Exclusive self-learning program for students of ICT Academy member institutions!**

**Last date to register: 10 September 2022**
**To know more, visit: www.ictacademy.in/learnathon2022**









**ANSWER: 9801**

**EXPLANATION:**

**Suppose there are n houses in the left side and the total number of houses in the lane is m. Then Raja's house will be (n+1).**
**Now n(n+1)/2= m(m+1)/2- (n+1)(n+2)/2 (n+1)2 = m(m+1)/2 There are many pairs of n and m that satisfy the equation, but n=6929 and m= 9801 is the only pair from which we shall get more than 100 but less than 3000 houses on the right side of Raja's house.**

.

**- PG & Research Department of Mathematics**

# Upcoming Events

















# SRI RAMAKRISHNA
## COLLEGE OF ARTS & SCIENCE (Autonomous)
(FORMERLY SNR SONS COLLEGE)

Avinashi Road, Nava India, Coimbatore - 641 006.

Ranked 90th by NIRF 2022 | Accredited with 'A+' Grade by NAAC
AICTE & UGC Approved, ISO 9001:2015 Certified, Affiliated to Bharathiar University



## CONVENOR

**Dr.D.Sampath Kumar**
Associate Professor - Information Technology

## COORDINATORS

**Media**
**Dr.T.Sathiyaseelan**
Assistant Professor - Tamil

**Technical**
**Dr.P.Manikandaprabhu**
Assistant Professor - Computer Science